Registered At The
G. P. O. Colombo
As A Newspaper.

திராவிடன்

புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப் பெற்றது

சந்தா விளம்பரம்.	
தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு	ரூ 1-00
தபாற்செலவு உட்பட ,, ,,	ரூ 1 25
மலாய்நாட்டிற்கு ,, ,,	ரூ 2 5
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்	
தனிப்பிரதி 10 சதம்	
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.	

THE DRAVIDAN.
A Monthly Newspaper.

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

3 AUG

விளம்பர விகிதம்.	
1 கலம் முதன்முறை	ரூ. 4 50
¾ ,, ,,	ரூ. 3 00
½ ,, ,,	ரூ. 2 50
¼ ,, ,,	ரூ. 1 50

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு கட்டவேண்டும்.

புத்தகம்—2. { யாழ்ப்பாணம்-சுன்னாகம்:-விபவ ௵ ஆனி௴ ௨௩ (1928 ஜூலை௴ 6) வெள்ளிக்கிழமை. } இலக்கம்—5.

உ
கடவுள் துணை.

அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்காய்
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம்.

ஆங்கிலம் படிக்கும் கிளிப்பிள்ளைகள்.

அமெரிக்கா ஐக்கிய இராச்சியத்தில் பிரௌன்ஸ் வில்லி என்னுமிடத்தில் மிஸ் டாகிக் என்பவர் கிளிப்பிள்ளைப் பள்ளிக்கூடம் ஒன்றுவைத்து நடத்துகின்றார். இப்பாடசாலையில 1500 கிளிப்பிள்ளைகள் படிக்கின்றன. இன்னுங் கிளிகள் படிப்பதற்காய் அனுப்பப்பட்டு வருகின்றன. ஆங்கிலபாஷை கற்றுக்கொடுக்கப்படுகின்றது பாடங் கொடுக்கும்போது அவை வகுப்புவாரியாக அமைக்கப்பட்டிருக்கும் ஊஞ்சல்களில் உட்காருகின்றன. ஒவ்வொருவகுப்புக்கும் ஒவ்வொரு கிராமபோன் இருக்கிறது. கிராமபோன் பற்பல வாக்கியங்களைக் கூறக் கிளிகளும் கூடச்சொல்லுகின்றன. ஆறுவாரத்திற்குள் ஒருகிளி குறிப்பிட்ட அளவு பேச்சுக் கற்றுக் கொள்ளாவிடில் அது படிக்கத் தகுதியற்றதெனக்கண்டு தள்ளிவிடப்படுமாம்.

சுழலும் நாடகசாலை

வருங்காலத்தில் நாடகக் கொட்டகைகளில் சுழலும் சுரங்கமும், சுழலும் சபா மண்டபமும் அமைக்கப்பட்டிருக்கும் என்று ஜெர்மானியக்கல்தச்சர் ஒருவர் கூறுகின்றார். இவர் அத்தகைய நாடகசாலை ஒன்றைக்கட்டத் திட்டம் தயாரித்திருக்கிறாராம். அவர் திட்டம் நடந்தேறினால் சபையில் உட்கார்ந்திருக்கும் ஜனங்கள் ஆசனங்களுடன் திடீரென்று சுழற்றப்பட்டு அரங்கத்தின் மற்றொருபக்கம் கொண்டுபோகப் படுவார்களாம். முற்றும் வேறானகாட்சி அங்கு சித்தமாக அமைக்கப்பட்டிருப்பதுகண்டு ஆச்சரியமுறுவார்களாம்.

மதுபானக்காரனுக்காக அவமானமடைந்தார்கள்.

பாலப்பிட்டியாவுக்கருகிலுள்ள ஓர் கிராமத்தில் ஒருமலையாளத்தான் கண்கடை தெரியாமல் கள்ளைவிட்டுக்கட்டிக் கொண்டு வீட்டுக்கு வரும்வழியில் சேற்றுக்குள் விழுந்தெழுந்து அவலக்ஷணமாய் வீடுவந்து கிணற்றில் ஜலம் எடுக்கும்போது தள்ளாட்டத்தினால் கிணற்றுள் வீழ்ந்துவிட்டான். இதையறிந்த ஒரு செட்டி தனக்குப் பணங்கொடுக்கவேண்டியிருந்த அம்மலையாளத்தானைப் பார்ப்பதற்குக் கிணற்றை எட்டிப் பார்த்த சமையம் செட்டியார் கால்தவறிக் கிணற்றில் விழ, இவரைக்காப்பாற்ற ஒருவர் பின்னொருவராய் கிணற்றிற்குதித்தனர். குடிகாரன் இறந்தான் மற்ற மூவருக்கும் ஆபத்தான நிலைமையாம்.

இரண்டுவயதில் லட்சாதிபதி.

அமெரிக்காவில் சினிமாபடம் தயாரிக்கும் ஒரு கம்பெனியார் ஒருநாடகத்திற்குப் போக்கிரித்தனமான புன்னகையுள்ள ஒரு குழந்தை வேண்டுமென்று விளம்பரஞ் செய்திருந்தார்கள். அங்ஙனமே அறுநூறு குழந்தைகள் அவற்றின் பெற்றோரால் கொண்டுவரப்பட்டன அக்குழந்தைகளில் 2 வயதுடைய ஸ்நாகஸ் தேர்ந்தெடுக்கப்பட்டான். இப்பொழுது ஸ்நாகஸ்ஸுக்கு நான்குவயதாகிறது. இவனுடைய வருஷசம்பளம் 8000 பவுண்! ஏறக்குறைய ஒருலட்சத்தை எட்டிப்பார்க்கிறது!

கடலிற் குதித்த கன்னிகை.

ஒரு பிரான்சுக்கார வாலிபன் கடலோரமாகத் தனது நாயுடன் உலாவிக்கொண்டிருக்கையில் நாயை அலையடித்துக் கொண்டுபோய்விட்டதைக் கண்ட வாலிபன் நாயைக் காக்க முயன்று தவறிக் கடலில விழுந்துவிட்டான் அவ்வாலிபனைக்காப்பாற்றுமாறு 19 வயதுடைய மேரி லெட்ஜா என்ற ஆங்கிலப்பெண் கடலில் குதித்தாள். வாலிபனும் பெண்ணும் கடலில் போய்விட்டார்கள் இருவரையும் காப்பாற்றுமாறு ஒரு ஐரோப்பியன் சென்றதில் அவன் காயமடைந்தான். இப்பரிதாபக் காட்சியைப் பார்த்திருந்த அப்பெண்ணின் தாய் அக்கடலில் விழுந்து உயிர் விடப்போனாள். அவளைப் பலர் சேர்ந்து காப்பாற்றினார்கள்.

ஒன்பது தலைகளை ஒருமுறையில் வெட்டினன்.

பஞ்சாப்பில் ஒரு சீக்கியன் ஒருகோழியை முஸ்லிம்கள் அறுப்பதுபோலன்றி வேறுமாதிரியாக அறுத்துவிட்டதால் கோபமுற்ற முஸ்லீம்கள் அவனை மௌல்லியிடம் அழைத்துக்கொண்டு போனார்கள். அவர் இவன் ஒருபசுவை வெட்டினால் கோழியைத் தவறான முறையில் அறுத்தபாவம் தீர்ந்துவிடுமென்றாராம். முஸ்லீம்கள் ஒருபசுவை வெட்டுமாறு கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். நீளமான கிர்பான்வாள் ஒன்று சீக்கியன்வசங் கொடுத்தார்கள். அவன் உடனே பசுவை வெட்டுவதற்குப்பதிலாக ஒன்பது முஸ்லீம்களின் தலைகளை ஒவ்வொன்றாக வெட்டிவிட்டானாம். விசாரணை நடக்கின்றதாம்.

உயிர் விடுதலே காதலின் முடிவு.

ஜப்பானில் தோனிசாகை என்ற நடனமாது மிகவானி என்ற இளையனான சங்கீதப் புலவனைக் காதலித்தாள். இருவரும் கலியாணஞ்செய்துகொள்ள விரும்பினார்கள். ஆனால் பெண்ணின் பெற்றோர்கள் விருமபவில்லை. இதனைக்கண்ட காதலர் இருவரும் ஒருவிடுதியில் சென்று விஷமுண்டு உயிர் துறந்தனராம். இருவரும் ஒரே படுக்கையில் பிணமாய்க்கிடந்தனராம். உயிருடன் இருக்கும்பொழுது நாங்கள் இருவரும் ஒன்றுசேர்ந்திருக்க முடியாது இறந்துவிட்டால் இருவரும் சேர்ந்திருக்கமுடியும் என்று அப்பெண் எழுதிவைத்திருந்தாளாம்.

விகடனின் நவரசம்.

இவ்வுலகப்பொருளும் இன்பமும் நிலையற்றனவாயிருப்பதால் உலகத்தின் நிலையாமையை உள்ளவாறுணர்ந்து அறநெறியைக் கடைப்பிடித்தலே பேரின்பம் பயக்குமென்று அறிவுடையோர்கள் தெளிவாகக் கூறுகின்றார்கள். இளமையும் யாக்கையும் செல்வமும் நில்லா என்பதை நன்குணர்ந்தபின்னரே இவ்வுலகப்பற்று ஒருவனை விட்டு விலகும். இவ்வாறு உலகப்பற்றை ஒழிப்பதற்கு முந்தியே யாருடைய எண்ணம் ஈடேறும் என்பதே. தாயைப் பழித்துத் தந்தையை வெறுத்துச் சகோதரரைப்பிரித்து வடிவலங்கார சுந்தர சோபிதகுண ரூபவதியைக் கொள்ளும் வாலிபனின் எண்ணம ஈடேறுமா? கணையாளி மாற்றிக் காரிகையை விட்டுப் பிரிந்தவனின் எண்ணம் ஈடேறுமா? யோக்கியத்தின் பொறுப்புக் கொண்டு தன் சகோதரனுக்கு நஞ்சூட்டுபவனின் எண்ணம் ஈடேறுமா? தான் இறந்துவிட்டேனென்று தன் தம்பிக்குத் தந்திசொல்லும் சண்டாளத் தமையனின் எண்ணம் ஈடேறுமா? தன்னையும் தன் இனத்தாரையும் நினையாது பேராசை கொண்டோனின எண்ணம ஈடேறுமா? 'ஆசைக்கோ ரளவில்லை' என்பதுபோன்று இன்னும் ஆயிரத்தெட்டு எண்ணங்கள் எண்ணலாம்; ஆனால் அத்தனையும் ஈடேறுமா.

* * *

நன்றிகெட்ட நாயகனை மணந்து நல்வழிப்படுத்த நினைக்கும் நாயகியின் நல்ல எண்ணம் ஈடேறுமா? விதியோடு மணமான ரதிமாவத யணையாது விலைமாதை யணைவோனின் வீண் எண்ணம் ஈடேறுமா? தொழிலாளியென்பவன் தனகிழுள்ள ஏழைக் கூலிகளின் வரும்படியை அபகரித்து முதலாளியென எண்ணும் எண்ணம் ஈடேறுமா? வெந்த வீட்டிற் பிடுங்கின தருதியென நினைக்கும் வியாபாரியின் எண்ணம் ஈடேறுமா? தன்மகளின் எண்ணிக்கை நிறைவேறும் பொருட்டு மருமகனை இசைத்து மணமாக்குந் தந்தையின் எண்ணம் ஈடேறுமா? கானலின் நீரைப் பளிங்கென மதிக்கும் கன்னிகையின் எண்ணம் ஈடேறுமா? யாருடைய எண்ணம் ஈடேறும் என் அப்பனே?

* * *

நீதிபதியின் முன்னிலையில் குற்றவாளியெனநிறுத்திய கள்வனொருவன் ஒப்பனை இல்லாததினால் சுத்தவாளியெனக் கண்டு விலத்தப்படுகிறான். உலகத்தவர்க்கு இவன் கள்வனென்பது நன்றாகத் தெரியும். கள்வன் தன்னைச் சுத்தவாளியெனச் சொல்லி உலகத்தினர்க்கு விளம்பரப் படுத்துகிறான். இவனின் விளம்பரத்தை உலகத்தினர் ஏற்றுக் கொள்வார்களா. இதுமாதிரியே ஒருவன் தன்னை யோக்கியன் என்றுசொல்லிப் புதினப்பத்திரிகைகளில் பணத்தைக் கொடுத்து விளம்பரம் போடுகின்றான். விளம்பரத்துக்காக மற்றையோர் யோக்கியனெனக்கொள்வதற்கு முந்தி அவனின் விளம்பரமே உண்மையைக் காட்டுகின்றது.

* * *

தெய்வத்தின்கண்ணே வாய்பேசாத பிராணிகளாகிய ஆடுகோழிகளை அலற அலற வெட்டிப் பலியிடுகிறார்களே. இவர்களை அப்பழிக்குத் தெய்வம் சும்மா விடுமா. பாருங்கள் பொதுவாகச் சனங்களில் அறிவுடையோரும் அறிவிலாப் பாமர சனங்களும் உண்டு. இப்பாமர சனங்களே பழி பாவங்களுக் கஞ்சாது வேள்விகளில் கொலைபுரிந்துதரும்படிக்கு ஆடுகளையும் கோழிகளையுங் கொண்டு சென்று அக்கொலைக்களத்தில் கொலை புரியுந் தூதரிடத்துச் சேர்த்து அந்தோ உயிர்களை அதமாக்குகின்றார்கள். ஆவென்ற அழுகை அகிலமெல்லாம்; ஓவென்ற அழுகை உலகமெல்லாம்.

* * *

அறிவீனர்களால் கொண்டாடிவரும் இம்முறையைக் கோவில் முதலாளி அதிகாரி பூசகர் முதலியோரெனப்படும் அறிவுடையோர் இதனைக் கண்டித் தொதுக்காதுவிடில் இவர்களே இப்பழிபாவத்துக் குறைவிடமாக விருக்கின்றார்களென்பதிற் குற்றமில்லை. ஏனெனில் கோவில் வரும்படியொன்றையே நோக்கிக்கொண்டிருக்கும் புண்ணியசிலரென்றால் பொருந்துமா.

கணவனும் மனைவியும் சகலவளங்களும் நிறைந்த பெரியமாளிகையிலே இருந்து விலையேறப்பெற்ற ஆபரணங்களைத்தரித்தும் விதம்விதமான பட்டுடைகளை உடுத்தும், பாலொடு சோற்றைப் பொற்கிண்ணத்தில் உண்டும், சில்க்கினால் தைத்த மஞ்சத்தின் படுக்கையிலே செவிக்கினிமை பொருந்திய வாத்தியங்களைக் கேட்டுக் கண்ணுறங்கியும் விழித்தும வாழ்ந்தாராயினும் அன்பு என்னும் ஒரு குணம் அவர்களிடத்து இல்லையாகுமானால் முழுமதியை இழந்து இருண்ட வானத்தைப்போல இன்பமில்லாத வறிய வாழ்க்கையே வாழ்ந்தவர்களாவார்கள். மண்சுவர் எடுத்துத்தென்னோலை வேய்ந்த குடிசையிலே காலையிலிருந்து மாலை[illegible]யும் கையும் மெய்யும் சலிக்கும்படி உழைத்து அதனால்வந்தனகொண்டு கால்வயிறு அரைவயிறும் நிரம்பாத கூழைக்கண்ணீரைக்குடித்துக் கந்தையைச் சுற்றிக் கையை அணையாகவைத்துத் தரையில் நித்திரைகொண்டெழும் ஏழை வாழ்க்கையை அக்குடும்பத்தினர் வாழ்ந்தாராயினும் அவ்விருவரும் மனங்கலந்த அன்புடையவராயின் அவர்கள்தான் இம்மையிலும் மறுமையிலும் உண்மையான இன்பத்தைப் பெற்று இல்வாழ்க்கையின் பயனை அடைகிறார்கள்.

* * *

பிறர் செய்வதுபோல் செய்தல் நாகரீகம் ஆகாது. இராசாவின் உடைதரித்துக்கொள்ளலாம். அதனால் ராசன் ஆகிவிடுவேனா? சிங்கத்தோல் போர்த்துக் கொண்ட கழுதை சிங்கமாகிவிடுமா? பிறரைப்போல் வேஷமிடுதல் மனிதனுடைய பயங்கரமான இழிநிலைக்கு அறிகுறியாகும். ஒருவன் தன்னைத்தானே பகைக்க ஆரம்பித்து விட்டதால் தன்முன்னோர்களைப்பற்றி வெட்கப்பட ஆரம்பித்து விட்டால் அவனுடைய அழிவுகாலம் நெருங்கிவிட்டதென்பது உறுதியாகும்.

ஊழிய சங்கத்தின் வேலை.

யாழ்ப்பாணம் ஒடுக்கப்பட்டவர் ஊழியச்சங்கத்தின் தலைவராக விளங்கும் ஸ்ரீ நெவின்ஸ செல்வத்துரைப்பிள்ளையவர்க்கு ஷ சங்கத்தின் அங்கத்தவனாகிய க. சிவதாசனாகிய அடியேன் எழுதும் விண்ணப்பம்.

எனது மருகன் K. நாகநாதியென்னும் பையனை எனது மகளின் மணாளன் என்ற பேரவாக்கொண்டு தெல்லிப்பழை போதன வித்தியாசாலையிற் படிப்பித்து ஷ சபைப் போதகர் அவர்களால் சபையிற் சேர்த்துக்கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலைக்கு விட்டிருந்தேன் இவைகள் யாவும் உண்மையெனக்கண்ட ஊழியச்சங்கத்தின் உபதலைவரென விளங்கும் (சாமுவேல்) உபலிகிதரென்னும் (யோவேல்) இவர்கள் இருபேரும் ஷ பையனைக் கூட்டி மகளின் மணக்கோலத்தைக் கண்ணுற்றுக்களித்தனர். இவர்களின் இச்செயலைப்பற்றி எழுதியிருந்தேன். ஷ பிரசிரண்டு அவர்களின் பதில் கிடைக்கவில்லை. இவர்கள் செய்து கொண்ட வஞ்சகச் சூட்சியைக் கண்டித்து ஷ சங்கத்துக்காக என்னையும் தைரியப் படுத்துவாரென்றிருந்தேன், எனது விண்ணப்பத்தைக் கவனியாதபடியால் ஷ சங்கத்தினின்றும் விலகிக்கொண்டேன் என்பதை யாவருமறியும்படிக்கு வெளிப்படுத்துகின்றேன்.

க. சிவதாசன்.

விசேஷ அறிவிப்பு.

பியானோ, வில்லிபுளூத், பிடில், ஆர்மோனியம், கிறமபோன் முதலிய சகல வாத்தியங்களும், கடிகாரங்களும் திருத்திக்கொடுக்கப்படும். மேற்கூறிய கருவிகளுக்குத் தேவையான எந்த சாமான்களும் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

கே. எஸ். இரத்தினம்,
பெரிய தெரு, யாழ்ப்பாணம்.

திராவிடன்.

ஜூலாய்:— 1928,
ஆனி மீ 23௳ வெள்ளிக்கிழமை

கற்றறிந்த [illegible] சொல்லினுஞ் சொல்
[illegible] குறள்.

இரத்த வெள்ளம்.

—:•:—

கோவில்களில் நடக்கும் அக்கிரமங்களுக்கு அளவே இல்லை. யாதொரு குற்றமுஞ் செய்யாத ஏழைப்பிராணிகளாகிய ஆடு கோழி முதலியவைகளுக்குப் பூமாலை கட்டி வெடி குடை மேளதாளங்களுடன் வேடிக்கையாகக் கோவிலிற் கொண்டுபோய்க் கால்பிடித்துத் தலைபிடித்து உடல்வேறு தலைவேறாக உதிரமாறாகப் பெருக வெட்டி எறிந்துவிடுகின்றார்களே. இதைப்போன்ற கொடுமை உலகத்தில் வேறுண்டா, ஒரு மனிதனை இப்படி வெட்டிவிட்டாலோ மரண தண்டனை? ஏழைப்பிராணிகளாகிய ஆடு கோழிகளுக்காகப் பேச ஆர் இருக்கின்றார்! மற்றச்சமயத்தவர்கள் ஆடு கோழி முதலியவற்றை உண்பவர்களாயிருந்தாலும் தமது கோவில்களில் பலிபுக்கு இடமாக அவற்றை வதைசெய்வது கிடையாது. சைவர்களோ தமது சமயத்தின்படி மாமிசபோசனமாகாதென்று சொல்லிக்கொண்டு எண்ணிறந்த ஆடுகோழிகளைக் கோவில்களில் வெட்டி வளர்த்திவிடுகின்றனர். கோவில் கொடியேறினால் மாமிசம் உண்பதில்லை. விரதநாட்களில் மச்சம் பாவிக்கும் சட்டிபானைகளிற் சமைப்பதில்லை பூசாரி மச்சஞ்சாப்பிடுவதில்லை. சுவாமியார் இறைச்சிதின்பதில்லை பின்னை எதற்காக ஆடுகோழி அறுப்பது, கோவில் வருமபடிக்கும் வைரர் வியாபாரஞ்செய்வதற்குத்தானே. கடவுளுக்கு மச்சமாமிசத்தில் நிரம்பிய பிரியமென்று சாமேற்றுக்கொண்டால் அத்தெய்வங்களுக்கு நாடோறும் கோழியிறைச்சி ஆட்டிறைச்சிக்கறிகளில் நைவேத்தியம் வைத்தல்வேண்டுமல்லவா. கடவுளுக்குஇறைச்சியில் விருப்பமாயிருக்கிறபோது அதனை மனிதன் உட்கொள்ளாமல் விடுவது கடவுளுக்கே பிடிக்காது. ஆதலினால் கோவில் கொடியேறினால் உடனே கிடாய்கள் கோழிகள் அடித்து நல்லாய்ச் சாப்பிடவேண்டும் இளநீர் பழம் முதலியனகொண்டு போவதற்குப் பதில் கோழிக்குஞ்சு ஆட்டிறைச்சி முதலியன கொண்டுபோய்க் கோவிலிற் சொரிதல் வேண்டும் அப்படிச்செய்தல் கூடாதெனச் சொன்னால் கோவிலில் ஆடுகோழி வெட்டுவதையும் நிறுத்திவிட வேண்டுமல்லவா?

வேள்வி என்றால் என்ன? ஒருபெருங் கொண்டாட்டம் தானே. அன்றைக்கு ஏழை எளியது ஒன்றும் பிழைப்புக்குப் போவதில்லை அன்றைக்குத்தான் குழுக்கை குஞ்சு கிழடு கட்டை எல்லாம் எண்ணெய்தேய்த்து முழுகுவது. வேள்வியிலன்று தலைபோன ஆடுகளை வண்ணான் பொட்டளி சுமப்பதுபோல முதுகில் போட்டுச் சுமப்பாரும் காவிற்போட்டுச் சுமப்பாரும் வண்டில் கார் இவைகளிற் கட்டிச்செல்வாருமாக ஆட்டுப் பிணங்களையும் கோழிச்சவங்களையுங் கொண்டு சென்று பங்குபோட்டுத் தின்றுவிடுகின்றனர். சிலர் தோரணம் தூக்குவதுபோல இறைச்சியைக் கயிற்றில் கோர்த்துத் தூக்கிக் காயவிடுகின்றனர். இது என்ன கடவுளுக்கு ஏற்குமா? கோவில்களிற் பூசை செய்யுங் குருக்கள் முதலியோர் இக்கொடியவழக்கத்தை நிறுத்தமுடியாதுபோனால் அக்கோவில்களில் பூசைசெய்யாது விலகிக்கொண்டாலென்னை? தமிழர்களுக்குட்டான் சாமியாடுதலும், சன்னதமும், செடிலாட்டமும், தலையடியும், வாளடியும், தேவடியும், மிருகபலியும், வருஷாவீதம் வளர்ந்துகொண்டே வருகின்றதெனச் சொல்லுதல் குற்றமாகாது. இன்னுங் குருக்கண்மாரென்ன அறியாமையிற் குறைந்தவர்களா? சோமசாந்தியில கோழி அறுக்கவேண்டுமென்றும், சப்பறத்தடிக்குச் சென்று பெரியபெரிய கோவிலிற்கூடக் கிடாயறுத்து விடுகிறார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்கூட எவ்வளவோ முயன்றும் ஒன்றுஞ்செய்ய முடியவில்லை ஆடுகோழி அறுப்பதற்குச் சாத்திரசம்பந்தமில்லை சனங்கள் தாம் தாம் நினைத்தபடியே ஒவ்வொன்றையும் முடித்துவிடுகிறார்கள் கோவில்கள் சபைகள் மூலம் அல்லது கல்வியறிவுள்ளவர்கள் மூலம் நடைபெறுவதானால் ஒருபோதும் இவ்வகையான ஒழுங்கீனங்கள் நடைபெறுவதற்கு வழியே இல்லாமற் போய்விடும். தான்தோன்றியாகக் கோவில்களும் மூளைவிகளும் தோன்றுவதால்தான இடமிசகு. கோவில்களை வழிபாட்டுக்குமாத்திரம வைத்துக்கொண்டு ஆடுகோழிவெட்டிச் சாப்பிடவும், தனிலடி, சின்னமேளம் முதலிய கொண்டாட்டங்களுக்கு வேறிடங்களையும் ஏற்படுத்தினால் நன்று. சிவபூசைக்குள் கரடியை விட்டோட்டப் படாதென்பதே அறிவுடையோர் கூற்று.

“ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்”

—:•:—

இம்முதுமொழி தமிழ் மூதாட்டியாராகிய ஔவைப் பிராட்டியார் செய்தருளிய “கொன்றை வேந்தன்” என்னும் நீதிநூலில் காணப்படுகிறது. தாமும் உண்ணாது பிறர்க்கும் உதவாதவராகிய உலோபிகள் தேடிச் சேர்த்து வைக்கிற பொருளைக் கள்வர், கொள்ளைக்காரர், கொடுங்கோன்மன்னர் முதலிய தீயவர்கள் பறித்துக்கொண்டு போவார்.

இக்கருத்தையொட்டியே திருவள்ளுவநாயனாரும் “அன்பொரீஇத் தற்செற்றற நோக்கா தீட்டிய வொண்பொருள் கொள்வர் பிறர்” என விளக்கிக் காட்டியிருக்கிறார் கொடுக்க மனமில்லாமையால் தங்கள் உறவினர் பந்துக்கள் முதலானோர் பால் அன்பு செய்தலை ஒழித்து வேண்டுவன நுகராது தன்னை வருத்தி வறியார்க்கு ஈதல் முதலிய அறத்தை நினைப்பதுஞ் செய்யாது ஈட்டப்பட்ட ஒள்ளிய பொருளைக் கொண்டுபோய்ப் பயன்பெறுவார் கள்வர் முதலாயினரே யாவர்.

தேனீக்கள் அலைந்து திரிந்து மலர்களினின்று எடுத்த தேனை மலைநாடுகளில் கூடுகட்டிச் சேர்த்துவைத்து அவைகள் அனுபவியாதிருக்க வேடர்கள் அத்தேனைக் கவர்ந்துகொண்டுபோகிறார்கள். அதுபோலவே ஈயாத புல்லறிவாளர் தங்களை வருத்தித் தொகுத்துவைத்த பொருளைத் தாங்களும் அனுபவியாது அறத்திற்குங்கொடாது பிறர்கவர்ந்துகொண்டு போக ஏமாறி நிற்கிறார்கள். “உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றுங் கெடாஅத நல்லறமுஞ் செய்யார் - கொடாஅது வைத்தீட்டினாரிழப்பர் வான்றோய் மலைநாட உய்த்தீட்டுந் தேனீக்கரி” என்று விளக்கப்பட்டிருக்கிறது. தாமுமுண்ணாது பிறர்க்கும் நல்லவழியில் கொடுக்க அறியா மூடர்கள் ஓயாமல் பணம்! பணம்!! என்று அலைந்து திரிந்து துன்பப்பட்டுத் தேடிவைக்கிற பொருள் தீக்கும், வெள்ளத்துக்கும், பேய்க்கும் இரையாகி விணாகும் என்பதனைத் “தீயாலோ நீராலோ தேர்வேந்தர் தம்மாலோ மாயாத தெவ்வர் வலியாலோ - யாதாலோ, இப்பொருள்போய் மாய்கின்றதென்று பொருள் வைத்தார்கள் எப்பொழுது நீங்கா திடர்” ஈயாது லோபஞ் செய்பவன் இப்பிறவியில் உயிரோடிருந்தும், செத்தவனுக்கு ஒப்பாவதும், மறு பிறவியில், பேய்ப் பிறப்பை யடைவதும், உண்மையாகும். அவன் உயிரோடிருந்தால் யாருக்கென்ன? அவன் இறந்துபட்டால் யாருக்கென்ன? இது எதுபோலவெனில், எட்டிமரம், பழுத்தாலென்ன! பழாதிருந்தாலென்ன! ஈகைக் குணம் இல்லாத ஒருவன் இறந்த காலத்து எல்லோராலும் இழிவாய்க் கூறப்படுவான். ஈகைக் குணமுள்ள புண்ணிய புருடன் ஒருவன் இறந்த காலத்துப் புகழப் படுவான். சிறக, நாம் இந்த மண்மீது பிறக்கும் பொழுது நம்மோடு செல்வம்பிறக்கவில்லை, இறக்கும் பொழுது நம்மோடு செல்வம் வருவதற்கில்லை செல்வம் ஏதோ முன் செய்த நல்வினைப் பயனால் இடையில் வருகிறது இடையில் போகிறது. ஈயாத லோபி ஒருவன் இவ்வுலகத்தில் மாண்பினையுடைய மானிடப் பிறவி எடுத்ததாலாகிய பயனென்ன? அவனுக்கு என்ன புத்திதான் கூறுவது? என்பதை முற்றத் துறந்த சிவஞானச்செல்வராகிய பட்டினத்தடிகள் ‘பிறக்கும் பொழுது கொடு வந்ததில்லைப் பிறந்து மண்மேல் இறக்கும்பொழுது கொடு போவதில்லை இடை நடுவில் குறிக்குமிச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது இறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே.” என விளக்கி யிருக்கிறார். சிலர் திரள் திரளாகப் பொருள் தேடும் பொழுது சுற்றத்தார் என்றும், நேசர் என்றும் சிறிதுங் கருதாது எப்பொழுதும் அப்பொருளையே நினைத்துச் சேர்த்தலும், திரட்டி வைத்த பொருளைக் காத்தலும் அதைத் தீயவழிகளில் செலவிடுதலுமே தொழிலாகக் கொண்டு கண்மூடிக் காலங் கழிக்கிறார்கள். ‘செல்வஞ் சதமல்ல” என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கு மின்னல போல் தோன்றி விரைவில் மறையும் நிலையற்ற செல்வத்தை நிலையென்று எண்ணி இறுமாந்திருக்கும் மூடர்தம் பேதைமை தான் என்னே! ஆகவே, செல்வம் நிலையற்றதென்பதைத் தெரிந்து, செல்வம் உடையோர்தனை நல்வழிகளிலும் தம் பணம் சேரும் வண்ணம் பயன் படுத்திக் கொள்ளல் சாலவும் சிறப்புடையதாகும்.

எல்லாம் வல்ல இறைவன் நமக்கு மனமுவந்து கொடுத்தருளிய செல்வத்தைப் பின் கொடுத்துதவுவோமென்றிராது நாமும் அனுபவித்து இரப்போர்க்குங் கொடுத்து,இன்னும் மற்ற பலதருமங்களையுஞ் செய்து இன்புற்றிருத்தல் அறிவுடையோர் உள்ளக் கிடக்கையாம்.

சிலர் ஆடம்பரங்களைக் கவனித்தும், ஊரார் தங்களை மெச்சும் பொருட்டும் கல்யாணம் முதலிய சடங்குகளில் அளவற்ற பணத்தை விரையமாக்குகிறார்கள் அது புகழுக்குரியன அவர்களை யார் நினைக்கப் போகிறார்கள்! ஆனால் அப்பொருளைக் கல்வி வழியிலும், ஞான வழியிலும் செலவிடுவார்களென்றால் அவர்கள் புகழுடம்பு பெறுவதோடு என்றும் அழியாப்பெயரை உலகில் நாட்டுவார்களன்றோ! அவர்களை ஒரு நாவால் வாழ்த்துதல் போதாதே! நல்வினைப் பயனால் பெற்ற பொருளைத் தானும் அனுபவியாது தருமத்துக்கும் விடாது இறக்கும் புல்லறிவாளரை கடவுள் விரும்புவாரா? இப் பிறவியிலே அவனுக்குச் செல்வத்தைக் கொடுத்தது போலப் பறித்துக் கொள்வதோடு மறு பிறவியிலும் மறுமை நோய் கொடுத்து அவனைத் துன்புறுத்துவாரன்றோ! ஆனால் பொருளை ஈட்டுதலும், ஈட்டியதனைப் பிறர்க்கும் பயன் படுமாறு உதவுதலுமாகிய தருமம் சிலருடைய செல்வத்தை இப் பிறவியிலேயே வரச் செய்வதோடு மறு பிறவியிலும் வேண்டிய செல்வத்தைக் கொடுத்துக்காப்பாரன்றோ? அவர்முத்தி வீடு அடைவார் என்பதைக் கூறவும் வேண்டுமா;

ஸ்ரீ சாரதாதேவியின் அம்சமாகிய ஔவைப்பிராட்டியாரின் அற்புத சரிதை.

வண்ணைநகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை அவர்கள் எழுதியது.

(முற்றொடர்)

ஓர் ஞான்று ஔவைப் பிராட்டியார் வேற்றூருக்குப் போய்த் திரும்பும் மார்க்கத்தில், சூரியன் குடபாலடைந்தமையால், இங்கே இரவை நீத்துச் செல்வோமென உன்னி, அப்பட்டின வாசிகளை விளித்து, “ஐயன்மீர், யான் இக்கங்குற்போது துயில்வதற்கு யாண்டாவது பொதுமடமுண்டோ?” என வினவ, அவர்களுட் சிலர் ‘அம்மணி! இப்பட்டினத்துக்கு மேலண்டையில் ஒரு திருவாசற்சாவடியிருக்கின்றது; அதில் துயிலுவதற்கு வசதியான இடமுண்டு; ஆனால் அதில் ஒரு பைசாசம் இருந்து அனர்த்தஞ் செய்வதை அறைகின்றது; ஆதலால் அதில் பிரவேசிக்க எவரும் வெருவுகின்றார்களென்றனர். அம்மாற்றத்தைச் செவிமடுத்த ஔவையார், பேயைப் “பேய் அடிக்கப்போகின்றதா”? என்று கூறி ஆண்டெய்தி உள்ள அமைதியோடு பள்ளிகொண்டனர். அச்சமையத்தில் ஓர் பெண் ஆவேசம் வந்து ஔவையார் துயிலுற்றிருப்பதைநோக்கி, மிக்க சீற்றமெய்தி எற்றெற்றென்று அறைய வருவதை ஔவைப்பிராட்டியார் கண்டு உறக்கம் நீத்து விழித்து அவ்வலகையை நோக்கி, வெண்பாவை இரண்டுமுறை சொல்லுமளவில் பாடமாக்கத்தக்க ஞாபகசக்தி யில்லாதவனையும், வெண்ணிறமுள்ள ஓலையிற் கண்பாராதிருக்கக் கையினால் எழுத்தாணிகொண்டு எழுதமாட்டாதவனையும், ஒரு பாவிப்பெண்ணானவள் தசமதி சுமந்து மகவாகப் பெற்றாளே! பிறர் பார்த்து எள்ளி நகையாடத்தக்க மூடப் பிள்ளையின்றான் அத்தகைய சிதடசிரோமணியையே நீ அறைகுதி! அறைகுதி!! என்னுங் கருத்தையமைத்து,

“வெண்பா விருகாலிற் கல்லானை வெள்
ளோலை, கண்பார்த்துக் கையாலெழுதானைப்—
பெண்பாவி, பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப்
பெற்றாளென், றெற்றோமற் றெற்றோமற்
றெற்று.”

என்னும் வெண்பாவைப் பாடியருளினார். அக்கவியைக் கேட்ட பெண் பேயானது, மிகுந்த கல்வியறிவுடையதாதலால், சிஷ்டருட்சியாகிய வரை இச்சித்து இச்சிடைத்த நமது பூர்வோத்தரத்தைத் தெளிந்து கூறிய இவள் வாணியின் அவதாரமே! இவளுக்கு யாதுஞ் செய்யப்போகாதென அஞ்சி நாணத்தோடு மறைந்திருந்து, இரண்டாஞ் சாமத்தில் மீண்டும் எற்றென்று உருத்து வந்தது. அப்போது ஔவையார் அதனைத் தண்ணளியோடு பார்த்து, இவ்வுலகத்திலே முகிழ்முலைகளுண்டு; அவைகளைப் பெய்ப்ப [illegible] தேனுமரிபுமுண்டு; நல்ல பொழுதையான நற்செய்கைகளுமுண்டு; [illegible] முண்டு; இத்தகைய உபாயங்களை [illegible] கைமாறு கருதாத [illegible] திருக்கவும், நம்மொரு முயற்சியுஞ் செயப்பிலாத பெரிதாச் சோம் இம்பயடைந்த அட்டோய்! அதனால் மிகவும் கேவலமாயிருக்கிறாய்! என்று மேற்றிருப்பவர்களாகிய சோம்பேறிகளைப் போய் அறைகுதி! அறைகுதி!! என்னுங் கருத்தையமைத்து,

“வானமுளதால் மழையுளதால் மண்ணுலகிற்
றானமுளதாற் றடமுளதால்— ஆனபொழு
தெய்த்தோ மிளைத்தோமென் றேமாந் திருப்
பெற்றோமற் றெற்றோமற் றெற்று” [பாரை

என்னும் வெண்பாவைப் பாடியருளினார். அதைக்கேட்ட பிசாசமானது மறைந்து நடுப்போய் மூன்றாஞ்சாமத்திலும் எற்றெற்றென்று அசனியை யொத்த அடங்காத முனிவோடு ஆர்ப்பரித்து வந்தது. அப்போது ஔவையார் அதனைநோக்கி, “கருங்குழலிகள் மொய்த்த குழைப்புதரிலுள்ள, ஈச்சமரத்திற் பொருந்திய கனியைப்போல”, மிடியினாலலைந்து தன்னை வந்து இரந்தார்க்கு, இம்மியளவேனும் ஈயாது சேமித்துவைத்த செல்வத்தையும், தனக்கு அந்தியகாலத்தில் வேண்டுமென்று உச்சிட்டக் கையால் காகமோட்டாது வைத்திருந்த பிற பொருட்களையும், அருமையாகிய அந்நைப்பசை விற்றானே, தாயாதிகள் கவர்ந்துகொள்வார்கள்” ஆதலால் தான் சேர்த்திருக்கும் காலத்திலே அறங்களை யுருற்றி இம்மை மறுமை யின்பங்களை யொருங்கே யடைய தெரியாத அசமுசமானையே நீபோய் அறைகுதி! அறைகுதி!! என்னுங் கருத்தமைத்து

“கருங்குழலி குரைத்த ஈச்சங் கனிபோல்,
வருந்திவர்க்கொன் றீயாதான் வாழ்க்கை—
அரும்பசியில், இச்சித்த திருந்தபொருள் தாயத்
தார் கொள்வரே!, எற்றோமற் றெற்றோமற்
றெற்று

என்னும் வெண்பாவைப் பாடியருளினார். அக்கவியைக்கேட்ட அலகை ஆவேசமானது, ஓடிக்காது பின்னர் நாலாஞ் யாமத்திலும் வெருளியிதாரக் காத்தை உயர்த்தி எற்றெற்றென்று வந்தது. ஔவைப்பிராட்டியார் அதனை விளித்து, பெண்ணினதிலக்கணங்களனைத்தும ஒருங்கமையப்பெற்றவளே! எண்ணாயிரவருடங் காதம் புனலுள் அமிழ்ந்திக் கிடப்பினும், உலகின் நீர்புகாத சடையைப் போல, பொன்னுலாய அணியையணிந்த குலமகளிர் நெருங்கிய தனங்களிற சேராது, வரைவின் மகளிரை விரும்பிச் செல்கின்ற தூர்த்த ஆடவனைப்போய் அறைகுதி! அறைகுதி!! என்னும் பொருளையமைத்து

“எண்ணாயிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும் [வாய்
உண்ணீரம் பற்றாக் கிடையேபோல்—பெண்ணு
பொற்றொடி மாதர் புணர்முலைமேற் சாரானை
எற்றோமற் றெற்றோமற் றெற்று”

என்னும் வெண்பாவைப் பாடியருளினர்.

(வரும்.)

பொதுச் சமாச்சாரம்.

சுப்பிறீம்கோடு.

1928ஆ ஆடி மீ 16௳ திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கிறிமினல்விசாரணைச் சுப்பிறீம் கோடு மேற்படி டிஸ்திறிக்கோட்டில் ஆரம்பமாகி நடைபெறும்.

யாழ்ப்பாணம் ஒடுக்கப்படும் தமிழரின் ஊழியசங்கம் சென்ற மீ 28௳ வியாழக்கிழமை மாலை 4.மணிக்கு யாழ்ப்பாணம் சென் பத்திரிசியா கல்லூரி மண்டபத்தில் மேற்படி கூட்டங் கூடுவதாக வெளிப்படுத்தியிருந்தும் கூடவில்லையாம் கூட்டத்தினர்கள் சமுகம் கொடாமையால் போலும்.

வேல்ஸ் இளவரசர் தம்பியுடன் அடுத்த செப்டம்பர்மாதத்தில் தென் ஆபிரிக்காவிற்குச் செல்வாராம.

ஜப்பானில் சென்றமாசத்தில் ஓரிடத்தில் கடல் பொங்கியதால் பல மீன்படகுகள் முழுகிப்போயின. சமார் நூறு செம்படவர்களைக் காணவில்லையாம்.

இலங்கையில் சென்ற வருஷத்தில் பிரான்சிலிருந்து 1,22,905 கலன் விறண்டியும் ஒல்லாந்து தேசத்திலிருந்து 1,51,987 கலன் ஜின்னும், பிரித்தானியாவிலிருந்து 58,180 கலன் விஸ்கியும் இலங்கையில் இறக்குமதிசெய்யப் பட்டனவாம்.

திண்டுக்கலை அடுத்த பஞ்சம்பட்டியில் ஒரு மாதுக்கு சென்றமாதத்தில் உடல் ஒன்றும் தோளுக்குமேல் இரண்டாகப் பிறந்த தலை இரண்டும் கண் காது இரண்டும் பல் ஒவ்வொன்றுக்கும இரண்டும் கை கால் இரண்டுமாகத் தலைச்சன் ஆண்குழந்தை பிறந்து ஒரு மணிநேரத்தில் இறந்துபோய்விட்டதாம.

சென்றமாதம் பம்பாய்ப்பகுதியில் காந்தோவென்ற ஊரில் ஒரு ஸ்திரிக்கு நாலுகாலுள்ள பிள்ளையொன்று பிறந்திருக்கிறதாம்; குழந்தை தாய்ப்பாலைக் குடியாமல் தண்ணீரைக் குடித்து வாழ்கிறதாம்.

அமெரிக்காவில் மின்சாரக் கலப்பைகொண்டு நிலத்தை உழுகின்றார்கள். இக்கலப்பை பயிர் அழிக்கும் பூச்சிகளை அழித்துவிடுகின்றதாம்.

அமெரிக்காவில் பாஸ்டன் கண்காட்சிச் சாலையில் ஒரு பேசும் நாய் இருக்கிறதாம் அந் நாய் நாம் கேட்கும் கேள்விகளுக்கு வெகு அழகாகப் பதிலளிக்கிறதாம்.

மாசிட் என்னுமிடத்தில் நீண்ட ஆயுள்பெற்ற ஒரு குடும்பம் இருக்கிறதாம். 127 வயதுடைய அன்னைக்கு 111, 106, 105, வயதுகளுடைய குழந்தைகள் இருக்கின்றனவாம்.

நாற்றிசை நோக்கு.

:✲:

திருடனைப்பிடிக்க லேசான கருவி.

திருடர்களைப்பிடிக்க ஒரு புதிய கருவியொன்றை மிஸ்மோல்ரி என்னும் நாடகக் கன்னிகை ஒருத்தி கண்டு பிடித்திருக்கிறாளாம். இக்கருவி அமைத்திருக்கும் அறையில் திருடன் நுழைந்தால் அது பெருங் கூக்குரலிடத் தொடங்கிவிடுமாம். திருடன் திடுக்கிடக் கூடிய விதமாகக் கூக்குரலிடுமாம் இதற்கிடையில் வீட்டிலுள்ளவர்களனைவரும் விழித்துக் கொள்ளலாமாம் அக்கருவியுடன் இணைக்கப்படும் எந்தப் பொருளைத் திருடன் தொட்டாலும் உடனே பெரியசத்தம் போடத் தொடங்குமாம் திருடன் என்னசெய்தாலும் சத்தத்தை நிறுத்த முடியாதாம் பக்கத்து வீட்டினர் முதலியோருக்கும் கேட்கும்படி இருக்குமாம். இதன் விலை மிகவுங் குறைவாகவே முடியுமென்று அப்பெண் கூறுகின்றாள்

அதிசயமுதலையும் ஆபிரிக்காச் சுதேசியும்.

உகண்டா தேசத்தில் ஓர் அதிசயமுதலை இருக்கிறதாம் இது முதலைக்குரிய குணங்களுக்கு முற்றும் மாறாக மனிதன் கொடுக்கும் உணவை விரும்பித் தின்று உயிர்வாழ்கிறதாம் விக்டோரியா ஏரிக்கரையில் எஜாங்கோ என்னும் கிராமத்தில், ஆபிரிக்க சுதேசி ஒருவன் இருக்கிறான். அந்த ஏரிக்கரையில் அவன் வந்து ஒருவிதசத்தம் போட்டால், 11 அடி நீளமுள்ள ஒரு முதலை கரைக்குவருகிறதாம் அவன் கொடுக்கும் மீன்களை அது தின்கிறதாம் இந்த அதிசயத்தைப் பார்க்க, சனி ஞாயிறுகிழமைகளில் நூற்றுக்கணக்கான சனங்கள் அந்த ஏரிக்கரைக்கு வருகிறார்களாம் அந்த ஆபிரிக்க சுதேசி அநேகமான மீன்களை வைத்து விற்கிறான்; அவனிடத்தில் ஒவ்வொன்று 6 பென்னிவீதமாக வாங்கி அந்த முதலைக்குக் கொடுத்து அது தின்பதை வேடிக்கைபார்க்கிறார்களாம் இந்த வியாபாரத்தில் அச்சுதேசி அதிகபணஞ் சேர்த்துவிட்டானாம்.

மனைவியின் மூக்கை அறுத்த மூடன்.

பெல்காம் பகுதியில், சிபானி என்ற ஊரில் கிருஷ்ணமாலா என்பவனுக்குச் சோதியென்ற பெண் ஆறு ஆண்டுகளுக்கு முன் கலியாணமானாள், சென்ற தீபாவளியன்று அப்பெண்ணைத் தாய்வீட்டார் அழைத்துக்கொண்டு போயிருந்தார்கள் ஒருவாரத்திற் கெல்லாம் புருஷன் சென்று தன்வீட்டிற்குச் செல்லவேண்டுமென்றான். பெண்ணின் பெற்றோர்கள் அவ்வளவு சீக்கிரம் அனுப்ப மறுத்துவிட்டார்கள். சில தினங்கள் கழித்து அந்த மூடன் திரும்பவும் மாமனார் வீட்டுக்குப் போய்ப் பெண்ணின் தாய்தந்தையரைப் பொருட்படுத்தாமல் தனது மனைவியைப் பிடித்து, பரபரவென்று இழுத்துக்கொண்டுபோனான், பெண் அழுதுகொண்டே போனாள், வீடுசென்றதும் அவன் ஒரு மூங்கில் தடியால், நன்றாக அடித்தான். பின் அந்தப்பாவி அவள் மூக்கை ஒரு கத்தியால் அறுத்து எறிந்துவிட்டு, ரத்தம் பெருக அந்த அலங்கோலத்துடன் அவளை அவளது பெற்றோர்கள் வீட்டுக்கு இழுத்துக் கொண்டுபோய்த் தாக்கியடித்தான் இந்த விஷயம் பொலிசாருக்குத் தெரிந்து வழக்கு ஏற்பட்டதில் அந்தக் கொடிய கணவனுக்கு ஐந்துவருஷம் கடுங்காவல் கிடைத்ததாம்.

6000 பவுன் வரும்படியுள்ள வீடு.

நியூயோர்க் நகரில் ஐந்தாவது அவென்யூவில் பன்னிரண்டு மாடியுள்ள மாளிகை ஒன்றிருக்கிறது. இம்மாளிகைக்கு வருஷமொன்றுக்கு 6000 பவுன் வாடகை கிடைத்துவருகிறதாம். இம்மாளிகையின் கதவுகளிலுள்ள ஒவ்வொரு குமிழும் தங்கத்தகடு போடப்பட்டதாம் ஒரு மாடியின் கதவுகளின் கைபிடி, தில், சாவி, எல்லாம் பட்டித்தங்கத்தினாலானதாம் கட்டிய மறுவருடத்தில் 6 லட்சம் பவுனுக்குமேல் விலைபோயிற்றாம் இந்த மாளிகையில் 25 குடித்தனம் இருப்பதற்கு வசதியுண்டாம்; இவ்வீடு கட்டுவதற்கு முன்பு இவ்விதவாடகையுள்ள வீடு உலகிலேயே கிடையாதாம்.

திராவிடநேசன்.

மலாய் நாட்டிலுள்ள யாழ்ப்பாணத்தவர்களால், தமிழரின் நலத்தைநாடித் திராவிடநேசன் என்ற பெயருடன் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை சமீபத்தில் நடத்தப்போகிறார்கள் பங்கு ஒன்றுக்கு வெள்ளி ஒன்றுவீதம் அறுபதினாயிரம் பங்குகள் கொண்ட 60000 வெள்ளி மூலதனமுள்ள ஒரு லிமிட்டெட் கம்பெனி மூலமாகவே இப்பத்திரிகை நடைபெறும் பத்துப் பங்குகளுக்குக் குறையாமல் பங்குக்காரர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். பிராமணரையொழித்த மற்றையோருக்கே பங்குகள் கிடைக்கும். பல தனவான்கள் இதனை ஆதரிக்க முன்வந்திருக்கிறார்கள். இதைப்பற்றி அறிய விரும்புவோர் கோலாலம்பூர் அம்பாங் வீதி 80 திருவாளர் ஆர். வி சப்பையாபிள்ளை அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்

பத்திரிகை வரவு.

விவேகபாநு.

இது சௌகார்பேட்டையிலிருந்து வெளிவரும் ஓர் உயரிய மாதப்பத்திரிகை. நாட்டின் பூர்வீக சரித்திரம், பண்டைப்புலவர் பெருமை, சுகாதாரம், கைத்தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவைகளைக் குறித்த நல்லுரைகளும் மாதர்நீதி, மாணவரொழுக்கம், தேசபக்திமான்களின் சரிதைகள், இலக்கிய இலக்கண ஆராய்ச்சிகள், உலக வர்த்தமானம், பொதுச் செய்திகள், தற்கால விகடவிநோதம், பஞ்சாங்கம், படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும் நவீன நாவல்கள் முதலிய அரிய விஷயங்களைத் தாங்கி மக்களின் அறிவைப் பெருக்கி ஆனந்தத்தைக் கொடுக்கவல்ல இனிய செந்தமிழ்நடையில் எழுதி வெளியிட்டு வருவதே மேற்படி பத்திரிகையின் நோக்கமாகும்; இதன் ஆசிரியர் ஸ்ரீமான் S K கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள். வருடசந்தா ரூபா 1-00 வெளிநாட்டுக்கு ரூபா 1-25 வேண்டுவோர் மானேஜர் விவேகபாநு ஆபீஸ் நெம்பர் 20 நம்மாள்வார் தெரு முதல் சந்து, சௌகார்பேட்டை சென்னை என்றெழுதுக மேற்படி பத்திரிகையின் ஆசிரியரவர்களுக்கு நன்றி கூறுவதுடன் திராவிடன் பத்திரிகையையும் மாற்றுப்பத்திரிகையாக அனுப்புகின்றோம்

மங்கையர் கல்வியும் அதன் மாண்பும்.

சகோதர சகோதரிகளே!

பெண்மக்கள் இம்மையில் எவ்வாறு பெருமை அடைவரா? கற்பென்னும் விலைமதிக்கக்கூடாத அணிகலத்தைக் காப்பாற்றிக் கொண்டு, கணவன் வார்த்தையை மீறி நடவாமல் கணவனின் இஷ்டப்படி மனங்கோணாது அவர் மனம் திருப்தியடையும்படி செய்து அவர் மனம் பிறரிடங்களில் நாட்டங்கொள்ளாமல் "அன்னை தயையும் அடியாள் பணியும்" என்னும் எட்டுவித குணங்களில் ஒன்று இல்லாவிடினும் பிற எழுவிதங்களினாலும் அவர்களை நாம் களிப்பிக்கச்செய்யலாம். நாம் கணவனுடைய கருத்துப்படி நடப்போமாயின் "கொண்டார்க்குச் செய்தவம் வேறில்லை" எனும் அறிஞரின் வார்த்தைப்படி பெருமை யடைவோம். கணவருடைய கருத்தின்படி நடவாத பெண்டிர்கள் படும் கஷ்டத்தையும் பிறரால் அவர்கள் அவமதிக்கப்படுவதையும்பற்றி எழுதப்புகின் ஏடு இடங்கொள்ளாது ஆயினும் அருந்தமிழ்மூதாட்டியாராகிய ஔவைப்பிராட்டியார் ஒரு சமயத்தில் வயிற்றின் கொடுமையைச் சகிக்கொணாது ஒரு குடியானவனின் வீடு சென்று அவனது இல்லத்தே அமர அக்குடியானவன் அம்மூதாட்டியாருக்கு அன்னம் பரிமாறவேண்டுமென்று தன் மனைவிக்குச் சிற்சில குற்றேவல்களைப் புரிந்து கொண்டு களைப்புடனிருக்கும் மூதாட்டியாருக்கு அன்னமிடவேண்டுமென்று மெல்லெனச் செப்ப, அப்பெண் கணவன் செப்பிய வார்த்தையால் கடுஞ்சினமுற்று கணவனுக்குப் பரிமாறிய கோலத்தைக் கண்ட மூதாட்டியார் கீழ்வரும் பாடலைச் செய்துவிட்டார்.

"இருந்து முகந்திருத்தி யீரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாளோடோடத் தான்"

இத்தகைய கொடுஞ் செய்கைகளைச் செய்வார்கள் பிடாரிகளே இவர்களைப் பெண்ணாகக் கொண்டவர் கதி எவ்வாறாகும்? அவர் இல்லறதர்மத்தை எப்படி நடத்துவது? இத்தகையாரைப் பெண்ணாகக் கொண்டவர்கள் கூறாமற் சந்நியாசங் கொள்ளத்தானேவேண்டும். அந்தோ! அத்தகைய குணங்கொண்டாரைப்பற்றி எழுதவும் என் பேனா நடுங்குகின்றது; பெண்ணாகக் கொண்டவர் மனம் எப்படியிருக்குமோ என்பதைப் படிப்போரே உணர்ந்துகொள்ளுங்கள்

பெண்களுக்குக் கல்வி இருப்பின் இது மாதிரிக் கொடுஞ்செயல்களைச் செய்ய இசைவார்களா? பெண்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுவதென்றால், ஒரு அரசனானவன் செங்கோன்முறை வழுவாது அரசுபுரிய எவ்வளவு அறிவு வேண்டுமோ, அத்தகைய அறிவு வாய்க்கப்பெற்று இருந்தால் அன்றி தம் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள இயலாதென்று திண்ணமாய்க் கூறுவேன். ஒரு நாட்டைக் கைப்பற்ற வேற்றரசன் அக்ரமமாய்ப் பிரவேசிப்பதுபோல, ஓர் பெண்ணின் கற்பைக் கெடுக்க அநேக போக்கிரிகளுண்டு அப்பாதகர்கள் தாம் காதல்கொண்ட பெண்ணுக்கு அநேக இதமொழிகளைச் செப்பி, அவளைத் தம்வயப்படும்படி செய்து தம் காதலைத் தீர்த்துக்கொண்டபின்னர், அவளைத் துணையற்றவளாய்க் கைவிடுகின்றனர் இத்தகைய கபட எண்ணங்கொண்ட சிற்றின்பப் பிரியர்களின் "நெஞ்சில் நஞ்சும் நாவில் தேனுங்கொண்ட" போலி இதமொழிகளுக்குட்பட்டுச் சற்றும் ஆய்ந்தோய்ந்துபாராது வீணிற் கற்பழிந்த பெண்ணின் கதி என்னவாகும். அவள் செய்கை ஊரெங்கும் பரவி, பலர் நகைப்புக்குச் சிக்குண்டு, பலரால் இகழப்பட்டு வருந்த முறநேருகிறது இத்தகைய செய்கை யடைந்தாளை நான் நேரில் கண்டு மனம்வருந்தியிருக்கின்றேன். அப்பெண் கல்வியறிவுள்ளவளாயிருப்பின், இத்தகைய இன்னல்களுக் காளாவாளா? முதலிலேயே காதல்கொண்ட கள்ளனுக்கு அறிவு புகட்டி அவனது தீய எண்ணத்தை மாற்றிக்கொண்டிருக்கலாமல்லவா?

மரீஞன்மணி

முப்புரிநூலின் கொடும்புரி முறுக்கு.

கன்னூரம் கத்தோலிக்கரால் நடத்தப்படும் மேல்நோக்கம் என்னும் பத்திரிகை புத்தகம் 3 லக்கம் 11-ல் (கண்டுபிடித்தலேலாவிட்டார், என முன்னுரையிட்டு ஒருவிஷயம் வெளிவந்தது இது 'தூங்கிவிடுகிறோம்! என்னும் தலைப்பின் கீழ் திராவிடனில் வெளிவந்த விஷயத்துக்கு மறுப்புப்போல சிற்சில வழுவழுப்பாக எழுதப்பட்டுள்ளது அதனை எழுதியவர் தமது இயற்பெயரைத் தெரிவிக்க அஞ்சி முப்புரிநூலோன், என்னும் மறைபெயருடன் நிற்கின்றனர். ஊழியசங்கத்தை ஊரெல்லாம் மெச்சுகின்றதென்றும் திராவிடன் மாத்திரம் மெச்சவில்லையென்பதாமே! முப்புரிநூலோனின், வயிற்றெரிச்சல், ஊழியசங்கம் என்ன என்பதை எல்லாருமறிவர். அது கிறிஸ்தவரின் கோட்டியேயன்றி வேறொன்றுமல்ல சில கிறிஸ்தவர்கள் அச்சங்க மூலமாக கவுன்சிலை எட்டிப்பார்க்கலாமென அங்கலாய்த்தது மெய்யே, கவுன்சிலுக்குப் போவதற்குக் காற்றாய்ப் பறந்து திரியுமவர்களுடன் தானும் சேர்ந்துகொண்டால் தனக்குமோர் மதிப்பு ஏற்பட்டுவிடுமென ஓடி ஆடித்திரிந்து அறியாத சனங்களை வெருட்டி அடித்து அதைப்பிடுங்கி எறிவேன்; இதைப்பிளந்து தருவேன் எனச்சொல்லித் தமக்கு மதிப்புத்தேடிக்கொள்ளும் பொருட்டு உழன்றுதிரியும் புரிநூல்தானா தூக்கிவிடும் கயிறு. கிறிஸ்தவர்களிடத்து சைவர்களுக்கு நம்பிக்கைவைக்க இடமேயில்லை.

சைவர்களுக்கு உதவிசெய்ய வருகிறோமென்று கிறிஸ்தவர்கள் தவளைகளைச் சுமக்கிறேன் என்றுபோனபாம்பைப் போன்றவர்கள், நாங்கள் கண்ணார மெய்யாரக் காண்பதென்ன, கிறிஸ்தவர் தம்மை அண்டினவர்களெல்லாரையும் தம்மதத்திற் சேர்த்துக்கொள்ள முயல்வதே. புரிநூல் துள்ளித்திரிந்து தமது அற்ப அறிவுக்கேற்பப் பற்பலபொங்கிவழிந்திருக்கின்றார். "துள்ளி எழுந்து அணில்முட்டுமாம் பேதை என்பது முதுமொழி! ஊழியசங்கத்தின் முக்கிய அங்கத்தவர் யாதுசெய்தாரென்பதை உலகமறியாதா? ஊராய்த்திரிந்து இந்த மதத்துக்குவா. அந்த மதத்துக்குவாவென்று சமயத்துக்கு ஆட்பிடிப்பவர்கள்யார்" சட்டசபைக்கு மெம்பர் போனால் என்னசெய்வார் சட்டசபைக்குப் போயாயிற்றே ஒன்றையும் காணோம் என்று சனங்கள் கேட்டால் நீங்களே உங்களைப் பழுதாக்கிக் கொண்டீர்கள் நாமென்ன செய்யலாம் எல்லாரும் கிறிஸ்த மதத்துக்குத் திரும்பிவிட்டால் சரிப்படுமென்றுதானே சொல்லுவார் புரிநூல் தாமும் ஏதோ வெட்டிவிழுத்துவதாக உலகத்துக்குக் காட்ட வீண உழலுதல் உழலுகின்றது, திராவிடனில் எழுதப்படும் விஷயங்களை புரிநூலும் அவரோடொத்த அவர் கூட்டாளிமார் சிலரும் தமக்குள் குறைகூறினார்கள் போலும் மற்றவரெவரும் திராவிடனைக் குறைகூறவில்லை நாள்வீதம் திராவிடனை வாங்கிப் படிப்போர் தொகை கூடிக்கொண்டே வருகின்றது.

'திராவிடன் ஊழியசங்கத்தைப் பார்த்துத் திடுக்கிடுகிறதெனப் பெருமையாகப் புரிநூல் கூறுகின்றது. ஊழியசங்கத்தைக் குறித்துத் திராவிடனுக்குத் திகைகாட்டம் சற்றேனுமில்லை ஆனால் அதன் ஊழலையும் ஒருபக்கம் பற்றிய நோக்கத்தினையுமே உலகமறிந்து கொள்ளும்படி சிறிது பிட்டுக்காட்டுவதாயிற்று.

வெறும் எலும்பைக் கடித்துக்கொண்டு நிற்கிறநாய் மனிதனைக்கண்டவுடன் உறுமுகிறது. நாயினுடைய எண்ணம் மனிதன் எலும்பைப் பறித்துக்கொண்டு போய்விடுவானென்பது, அப்படியே ஊழியசங்கம் என்னும் சங்கத்தைப் பற்றி ஏதேனும் வந்தவுடன் மேற்காட்டிய நாயின் பான்மையாக அச்சங்கத்திலுள்ள ஒருவர் உறுமுகின்றார், இந்திய சட்டசபைக்குத் தாழ்த்தப்பட்டவருள் இராசா என்பவர் போனார் யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்டவருள் யார்போவது? தாழ்த்தப்பட்டவருள் ஒருவன் தானொருபோது சட்டசபையில் நுழைந்துவிடலாமென்று குத்துக்கரணம் போடுகிறான் அவனிடத்தில நரியிடத்துக் காணப்படும் சேட்டைகளெல்லாம் காணப்படுகின்றன. சுயாலங்கருதிச் சிலமேல்வகுப்பார் அவனைத் தட்டி எழுப்பிவிட அவன் காற்றுடியாடுகின்றான் கிறிஸ்தவனைக் குறித்து யாதுமே பேசப்படாதாம் கிறிஸ்த மதம சனங்களை உயர்த்துகிறது, உயர்த்துகிறது என்று ஓயாது அலம்பிக்கொண்டு திரியும் அவனுக்கு அவன் சொல்வதில் இருக்கும் பிழையைக் காட்டுவது மோசமா, நன்மைசெய்யத் தீமையாக முப்புரி காரணகுறை கூறுகின்றானே வீண் பிரசங்கத்தைவிட்டு கிறிஸ்தகோவில்களில் சாதியைக் குறித்த விவாதங்கள் உண்டு இல்லையென்பதைக் கூறட்டும் வழுவழுப்பு வேண்டாம் சைவசமயத்திலுள்ள நண்பர்களையும் தன்வசப்படுத்தி அவர் தோளிலிருந்து செவியைக் கடிக்கப்பார்க்கும் அவன் புத்தியைக் கண்டித்தால் ஆத்திரமென்னத்திற்கு.

குருமார் மாத்திரம் உலகத்தோடொப்ப ஒழுகவேண்டுமாம் ஏனைய மூடக்கூற்றுகளை எடுத்து விரிக்கின் மிகவிரியும், புரிநூலுக்கு யாமெழுதுவதன் உண்மைகளை விளங்குவதற்கு மறிவுபோதாது, அறிவிலார்க்குரைப்பவர் அவரினும் பேதையாவரெனக் கருதி அவருக்குச் சற்போதம் ஈண்டுவிரித்திலம்.

சற்பிரசாதம்.

உபாயசிங்கன் கதை.

(முற்றொடர்.)

கடிதவிபரம்.

அந்தரப்புலம் தந்திரக்குறிச்சி,
குனியலூர் அம்பாமீ லிமாவ.

அடங்காமாரியன் மடங்காமங்கையாகும் சுந்தரவல்லியே சந்திரவதனரூபியே அடியென்னாசைப்பைங்கிளியே சொல்லால் மடக்கி ஆடவர்க்குச் சூழ்ச்சியுரைத்து வெட்கமயில்லாதவர்க்கும் எழுப்புவிக்கும் இருஞ்சேர் அளகக்கனகமின்னே கேசக்குயிலே உன்மீது நான் காதல்கொண்டு உன்னை வதுவைசெய்யுமாறு மெத்தவுஞ் சித்தங்கொண்டேன். நீயென்னை மணபுரியின் இராமபிரானும் சீதாபிராட்டியும், குறவள்ளி சுப்பிரமண்யசாமியும் தெய்வயானையும் எவ்வாறு வாழ்ந்தனரோ அவ்வாறு யாமிருவரும் சுகமுடன் வாழுவோம். உனக்கு உண்ணவோ உடுக்கவோ யாதொரு குறைவுமில்லை; மேலும், குண்டுமணிமாப்பிள்ளை புத்திரர் அவிட்டாத்தம்பி விதானை வேலையும் அவசெரிக்காவிருக்கின்றது. கரவடபுரத்து மரபாற்சிறந்த வஞ்சபூரண உடையார் ஆக்குத்தும் பறிபடப்போகின்றது எவ்விதமும் இரண்டுபகுதியாலும் இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாது வந்தால்தான், கைவஞ்சபூபாலனை விதானையாகவும், நெருப்புக்கொள்ளிமுதலியார் பாட்டன் சொறுவலப்புரட்டியை உடையாராகவும் ஏசன்றருக்குச் சிபாரிசு பண்ணுவேன் அந்தப்பணம் முழுவதும் உனக்கல்லாது வேறு யாருக்கு? நெருப்பாற்றுப் பாலத்தடிப்பாலுள்ள சாணவாயு மேற்குக்குடி ஊதிப்பல்லர் பெருமகன் உலக்கைநடலி புன்னையடி முற்சந்தியிலே லைசென்ஸ் இல்லாதசத்தைவிடும் குற்றத்தை நான் ஏசன்றருக்குத் தெரியாது தடுக்கும் பொருட்டுச் சந்தைக்காறிகளிடம் சேகரித்த ரூபாய் எழுபத்தைந்தும் உனக்குச் சங்கிலிபட்டியலுக்குத்தானே? அடி அம்மணி! உன்னைக் காணமல் என் வாணாள் வீணாய்ப் போகின்றது; அடி கண்ணாட்டி என் இச்சையைத் தீர்க்கும் அவடதமே! சரசவிலாச உல்லாச கேளிக்கைகளில் மயக்கும் மதனகாந்தியே! என் உருக்கு மணி ஒளியே! வண்டாரும் பூங்குழலி மாதரசி மானே! கண்டார் கலக்குறு கற்கண்டே! பென் தேனே! எனது விவாகத்தையிட்டு உனது தகப்பனைத் திருப்பிக்கொள்வது நெருப்பாற்றில் மயிர்ப்பாலம் போட்டாற்போலிருக்குமே. உனது தந்தை சொல்லில் நில்லாது நடப்பதே புத்தி; குருடனுக்கு வேண்டியது கண் உனக்குவேண்டியது புருஷன் ஆனபடியால் கணப்பொழுதும் தாமதியாது நாளையர்த்தராத்திரி புழுதிவிதானைவீட்டு முற்சந்தியில் குதிரைக்கரத்தையுடன் வந்துநிற்பேன், தப்பாது வந்துசேர்.

இங்ஙனம், உனது பிராணநாயகன்,
சடகோபாலசூரியர்.

மேற்கூறிய கடிதத்தை வாசித்த சுந்தரவல்லியும் பின்வருமாறு விடைபகரலாயினர்.

அந்தரப்புலம் தட்டாரக்குறிச்சி,
குனியலூர் அம்பாமீ லிமாபினாஸ்லை.

சடகோபாலசூரியரெனும் இடியேறனைய இளஞ்சிங்கமே, அடியேன் உமது நேசத்தையும் நீர் என்மீது காட்டிய பாசத்தையும் உமது நேசக் கடிதமூலம் வாசித்து யோசித்தேன். தந்தைசொல் மிக்கொரு மந்திரமில்லை என்ற ஔவை மொழிப்படி எமது பிதாவின் சம்மதமின்றி யும்மிடம் வருவது நீதியோ! நீரோ படிமீதுள்ள குடிமக்களைக் கட்டியாளும் நாட்டாண்மைக்காரன், நானோ இன்னொருகுலப்பெண், என்னிமித்தம் உமது மேல்குலப்பெருமையும் உத்தியோக மேன்மையும் கெடுமே அன்றியும் எனதுபிதா அடங்காமாரியன் புழுதிவிதானைக்கும் அவருக்குத் துணைவராகும் உமக்கும் மாறுப் பெட்டிசமெழுதி ஏசன்றருக்கறிவித்த சத்துருவாயிற்றே; நீரும் அவரும் கீரியும்பாம்புமா யிருக்கின்றீர்கள்; நீர் நாகாஸ்திரம்தொடுத்தால் அவர் கெருடாஸ்திரம் விடுவரே; மேலும் எனக்கு வயது 11 ஆகலின் பிராயமற்றபெண்ணை ஏமாற்றி எடுத்தீரென்று பினல்கோட்டுச்சட்டத்தின் 125-வது பிரிவுக்குமாறாய் கற்பைப் பங்கப்படுத்தவெத்தனித்தீரென்றும் கிறிமினல் வழக்குவைத்து உம்மையும் மாட்டி என்னையும் வெட்டி எறிந்துபோடுவரே. இன்னும் பனையின் நிழலும் நிழலோ, பகைவருறவும் உறவோ என்றபடி எனது தகப்பனுக்குப் பகைவராகும் உமது நேசமும் பாசமும் தண்ணீர்மேலெழுத்தா? கண்டதார். இதுசிற்சத் தட்டான் மருமகன் எனநீர் வசைபெறுவது எனது விருப்பன்று; நானுமக்குப் பாரியாய்வரின் போதிய பங்கிடு செய்யவேண்டியது.

இங்ஙனம்,
வல்லிமலர்.

சுந்தரவல்லியின் கடிதத்தை வாசித்தறிந்த சடகோபாலசூரியர் சுடுபுழுதியிற்பட்ட புழுப்போலத் துடித்துக் கட்டாத்திபோற் சிவந்து மீசை முறுக்க அதுவும் இயலாது. வண்டியிலே தடவிக் கண்சிவந்து கருமி யுறுமினர். இதற்கிடையில் மணியத்தின் கடிதவரலாறும், சுந்தரவல்லியின் விடையும் அடங்காமாரியன் செவித்துவாரங்களுக் கேறியது தட்டானும் மணியமிடங் கிட்டிவந்து எட்டிநின்று சடகோபாலசூரியரே தாசிவீடுகள் சென்ற உமது கோத்திரத்தவர் குணமா? நாணில்லாதநேரம் என் மனையகத்துவந்து வம்புவார்த்தைகள் கூறிப் பிராயமில்லாத எனது குட்டியின் மனதைத் தட்டிப்பார்த்தீர் உமது கடிதம் கச்சேரிமேசையில் ஏறினால் என்ன சம்பவிக்கும். கைக்கூலி வாங்கும் நீங்கள் பொறியிற்பட்ட எலிபோல் மாட்டிக் கொள்வீரே! தந்திர உடையார்வீட்டுக் கலியாணச்சண்டையில் அண்டைவீட்டு மாப்பாணன் மண்டையுடைத்து மாண்ட சங்கதியை நீர் பொலிசுக்கறிவியாது அச்சங்கதியை மறைக்கும் பொருட்டாய்த் தந்திரஉடையார் மருமகன் குடுமுடுக்குத்

(தொடரும்.)

மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதயசங்கம்.

இ மூ 1928-ம் ஆடு வைகாசி மீ 24-ம் உ திங்கட்கிழமை சாயங்காலம் 7½ மணியளவில் இச்சங்க அங்கத்தவர்களின் வேண்டுகோளின்படி விசேஷ சபைக் கூட்டமொன்று மேற்படி சங்க வித்தியாசாலை மண்டபத்தில் சங்க அக்கிராசனர் ஸ்ரீமான் வி கந்தவன உபாத்தியாயர் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அச்சமயம் சங்க அங்கத்தவர்களும் இவ்வித்தியாசாலையில் கல்விபயிலும் மாணவர்களின் பெற்றோர்களுமாக ஏறக்குறைய 100 பேர் வரையில் சமுகமாயிருந்தனர்.

கூட்டம் தேவார பாராயணத்துடன் ஆரம்பமானது. காரியதரிசியால் சென்ற கூட்டத்து அறிக்கை வாசிக்கப்பட்டபின் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது. பின்னர், தற்போது தொழிலிலிருக்கும் கட்டுவன் வாசி ஒருவரால் "கட்டுவன் வாசிகட்போர் வேண்டுகோள்" என்னும் தலையங்கத்தின் கீழ் எழுதியனுப்பப்பட்ட கடிதம் வாசிக்கப்பட்டது. இவையாவும் முடிந்தபின் ஸ்ரீமான் ஆ. சின்னத்துரையவர்கள் இப்பாடசாலையின் தற்கால நிலைமையைக் குறித்து ஓர் சொற்பொழிவு நிகழ்த்தியபின் சங்கப் பஞ்சாயத்தாரைநோக்கி 1928-ம் ஆடு சித்திரை மீ 9-ம் உ நடந்தேறிய இந்தச் சபையார் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி, "பள்ளிக்கூட மனேச்மென்றை" எடுப்பதற்கு என்ன ஒழுங்குகள் செய்திருக்கிறீர்கள் என்று கேட்டனர். சங்கக் காரியதரிசி எழுந்து, அத்தீர்மானப்படி விஷயங்கள் யாவும் சைவாபி விருத்திச்சங்கத்தாருக்கும், வித்தியாபகுதித் தலைவருக்கும் அனுப்பப்பட்டனவென்றும், சைவாபி விருத்திச்சங்கத்தாரிடமிருந்து பதில் கிடைக்கவில்லையென்றும், வித்தியாதலைவர் அவர்கள் சைவாபிவிருத்திச் சங்கத்தாரிடமிருந்து "மனேச்மென்றை" இச்சங்கத்தாருக்குக் கொடுத்திருப்பதாக ஓர் கடிதம் வாங்கித் தமக்கு அனுப்பும்படியும் அறிவித்திருக்கின்றனர் என விடையிறுத்தனர்.

அதன்பின் ஸ்ரீமான் வி கார்த்திகேசு என்பவரெழுந்து, சைவ சங்கப்பஞ்சாயத்தார் பாடசாலை மனேச்மென்றை" எடுக்கும் விஷயத்தில் சிரத்தையெடாது சைவாபிவிருத்திச் சங்கத்தாருக்குச் சார்பாக நடக்கிறார்களென அறிகிறபடியால், அவர்களை நீக்கி, தகுதியானவர்களை அவ்விடத்திற்கு நியமிக்க வேண்டுமெனக்கூறினர். அதை ஸ்ரீமான் இ ஆறுப்பிள்ளை ஆமோதிக்கச் சபையோர் யாவரும் அங்கீகரித்தனர். அதன்படி ஸ்ரீமான் வி கார்த்திகேசு அவர்கள் அக்கிராசனராகவும், ஸ்ரீமான் கா ஆறுமுகம்பிள்ளை அவர்கள் காரியதரிசியாகவும், ஸ்ரீமான் ஆ. சின்னத்துரையவர்கள் தனாதிகாரியாகவும், ஸ்ரீமான்கள் தா. இராமசாமி ஐயர், அ. கந்தையா என்பவர்கள் நிர்வாகசபை அங்கத்தவர்களாகவும், ஸ்ரீமான் இ. ஆறுப்பிள்ளை என்பவர் உதவித்தனாதிகாரியாகவும் ஸ்ரீமான் மு கதிரித்தம்பி என்பவர் ஸ்ரீமான் க இராசரத்தினமென்பவரின் இடத்திற்குப் பதிலாக நிர்வாகசபை அங்கத்தவராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். பின்னர் நிர்வாகசபையார், ஸ்ரீமான்கள் வி கார்த்திகேசு, தா. இராமசாமி ஐயர், கா ஆறுமுகம்பிள்ளை அ கந்தையா, வி கந்தையா என்பவர்களைப் பள்ளிக்கூடத்தையும் சங்கத்தையும் நடாத்துவதற்குப் பஞ்சாயத்தாராகவும் தெரிவுசெய்தனர்.

கடைசியில் இச்சங்கச் சபாநாயகர்கள் இப்பள்ளிக்கூட மனேஜராக விருக்கவேண்டுமென்றும், அவரே பள்ளிக்கூடத்தை வித்தியா பகுதியாருக்கெழுதிப் பதிவுசெய்வித்தல் வேண்டுமென்றும், பள்ளிக்கூட சம்பந்தமான விஷயங்கள் யாவும் இனிமேல், அவர் மூலமாக நடைபெறவேண்டுமென்றும், சைவாபி விருத்திச்சங்கத்தார், சமாதானமாகப் பாடசாலை மனேஜ்மென்றைக் கொடாவிட்டால், கோட்டு மூலமாக அவரே வழக்குத்தொடர்ந்து மனேஜ்மென்றைப் பெற்றுக்கொள்ள வேணுமென்றும், முன்னிருந்த பஞ்சாயத்தார் சைவாபி விருத்திச்சங்கத்தாருக்கு எழுதிக்கொடுத்த உறுதி சங்கத்தாரின் அனுமதியின்றி எழுதப்பட்டபடியால், அது செல்லாததென்றும், அதைப்பற்றிய விபரங்கள் பத்திரிகை மூலம் வெளிப்படுத்த வேண்டுமென்றும் இப்பொழுது நியமிக்கப்பட்ட காரியதரிசி முன்னிருந்த காரியதரிசியிடமிருந்து சங்கத்தாருக்குச் சேர்ந்த புஸ்தகங்கள், கொடிகள் முதலியவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் கொடுக்கமறுப்பின், கோட்டுமூலமாவது பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், சர்வசன சம்மதத்துடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சபையோராலும் அக்கிராசனராலும் கூறப்பட்ட கூட்டம் தேவார பாராயணத்துடன் 9½ மணியளவிற் பூர்த்தியாயிற்று

விநோத சம்பாஷணை.

உபாத்தியாயர்:—பிள்ளாய்! நீயின்று கலாசாலைக்கு ஏன் இத்தனை நேரஞ் சுணங்கினதேன்

மாணாக்கன்:—ஐயா! நானென் தந்தையோடு சில காரியமாகப் பட்டினத்துக்குப் போய் நேரஞ் சென்றுவிட்டது (மன்னிக்கவேண்டும்

உபா:—நீயுன் தந்தையோடு என்ன விஷயத்தைவிட்டு வெளிக்குப் புறப்பட்டாய்?

மாணு:—நானென் தந்தைக்கு அடைத்திருப்பேன், ஆயினும், உங்களுக்காகவே [illegible] இவ்விடம் வந்திருக்கின்றேன்.

உபா:—ஏன்? நீ கல்விகற்க விருப்பமின்றாய்!

மாணு:—என்தந்தை செய்வதைப்போல் நானுஞ் செய்துகொண்டாற்றானே என்னை அவரின் பிள்ளையென நீங்களுஞ் சொல்லுவீர்கள்.

உபா:—சரி! உன் தந்தையைப்போல் நீயென்ன செய்யவிரும்புகின்றாய்?

மாணு:—என்தந்தை ஒரு மதவெறியன் [illegible] அது கண்டவுடனே [illegible] நீங்கள் குறைசொல்லமாட்டீர்களென அத் தந்தையோடுதான் விட்டுவந்தேன்

உபா:—சரி! இவ்விதக் குருவர்க்கமைந்து நடக்கும் பிள்ளைகளை யான் கண்டுகொள்ளவில்லை; ஆகையால் நீ சாவதானமாயிருந்தால் நானுன் தந்தையைக் கண்டு இதைப்பற்றிப் பேசிக்கொள்ளுவேன். * * *

உபா:—பிள்ளாய்! உனக்கு ஆத்திசூடி முழுதும் பாடமாயிருக்கிறதா?

மாணு:—பாடமாகித் தானிருப்பேன் 62 வது நீதிவசனத்தைக் காணுமிட்டால்!

உபா:—62-வது நீதிவசனமென்ன?

மாணு:—ஐயம் சொற்கேல்.

உபா:—சரி இவ்வசனத்தாலுனக்கு என்ன குறை?

மாணு:—என்தந்தை இவ்வாத்திசூடியைப் படியாதபடியால் என்தாயின் சொற்கேட்டு அப்பாவியை எப்பொழுதுங் கடினமாயடிக்கின்றார்

உபா:—நீயுமவ்விதந்தான் செய்யவிரும்புகின்றனையா?

மாணு:—வேறென்ன! நானும் பிற்காலத்தில் இவ்விதம் நடக்காதொழிந்தால் என்னையும் பிதாவின் பிள்ளையென மற்றவர்கள் சொல்லிக்கொள்வார்களா * * *

உபா:—பிள்ளாய்! ஒரு மனிதனின் விலையென்ன?

மாணு:—விலை மதிக்கக்கூடாது என்றே சொல்லவேண்டும்; ஆயினும், நேற்றைய பனவில் ஒருமனிதன் விலை 2000 ரூபா யெனவே தெளிந்துகொண்டேன்.

உபா:—நேற்றையனவில் 2000 ரூபா வென்றாய் அங்ஙனம் நீ தெளிய வந்தவகையெங்ஙனம்?

மாணு:—யாரோவொரு வியாபாரி தன்பெறுமதி 2000 ரூபாவென அரசாட்சியாருக்கறிவித்து அதை உலகத்தோர் யாவருமறியும்படி பறைபறிவிக்கப் பேசினாராம்:என்பதாய் என் தந்தை கதைத்தார்

உபா: ஆர் ஒரு வியாபாரியா? பெரும் மடையனாயிருக்கின்றான்.

மாணு:—ஆம் ஐயா எமக்குமது பெரிய தக்க மயக்கமாயிருக்கின்றது எவ்வளவில், 10000, 15000, என அவ்வியாபாரிக்குக் கடன் கொடுக்கமாட்டார்களல்லவா?

உபா:—ஆம் அது மெய்தான்.

மாணு:—அப்படியாயின் இனிமேலவர்பாடும் அவர் குடித்தனப்பாடும் வசுக்கேடுத்தான்.

* * *

கந்தன்:—என்ன நண்ப மிகவுந் துக்கமாய் நிற்கின்றீர்?

தம்பன்:—என்னத்தைச்சொல்லுவேன், இவ்வளவு தொலைதூர காலந் தொடக்கி 1000 ரூபாவரை சேர்த்து வைத்திருக்கின்றேன். ஆனால், திரும்பவும், அப்படிப் பட்ட தண்ணி வந்தபடியால் முடியாதிருக்க மனங்கேட்குமா?

கந்தன்:—அதை யென்னதானுஞ் செய்வோம் அதுவிதை நினைத்துதான் கலங்குகின்றேன் என்றாலும், குடும்பத்திற்கழுது குடித்தனபடிதல "என்னுமகிர்த வாக்கை நினைத்து சற்றுத் தேறியிருக்கின்றேன்.

தம்பன்:—ஆகா அப்படியா? நானுமினிமேல் கலங்க வொழிந்திருப்பதிற்குக் கடவுள்போலிக்கருணை சமுகத்தக்கீர், உண்மைபோன்ற அறிவாளிகளோடு பேசிக்கொள்வதிற்கு நேரமில்லைய, கதியாயின் இன்னொருசமயம் பேசிக்கொள்ளுவோம்; தயவுசெய்து இம்முறை போய்வாரும் M. P. A

தற்பெருமையை நீக்கினல் நற்புகழை அடையலாம்.

அன்பார்ந்த நேயர்காள்!

மெய்ய நடவாற் குழப்பெற்ற விப்பூமண்டலத்தின்கண்ணே வாழப்பெறு மாந்தர்களின் குணங்களில் "தற்பெருமை" யென்னுமப் பெருமையுமொன்றாம் இப்பெருமை மாந்தர்களைத் தமக்கமைமையாக்கிக்கொண்டது. ஆனால் இப்பெருமையை அகற்றி நடப்பவர்கள் மிகவும் சொற்பமேயாகும். இப்பெருமையைத் தமது சீவியத்தில் கையாண்டு வருபவர்களெவர்களோ, அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் அடையுந் துன்பத்திற்கோரளவு பிரமாணமில்லையென முதியோர் கூறுவர். "அதுபோகட்டும்" ஒருவன் தன் சீவியகாலத்தில் தற்பெருமையாற் பீடிக்கப்பெற்ற மூத்தோர் சேர்க்கையாத வாழு மன்னவனே நல்லவனென்று சொல்ல யாராயினுமொருவர் முன்வருவரோ? இல்லை! இங்ஙனம் நடக்குமொருவன் மறுமையிலும் துன்புறுவனென்பது முண்மை நிச்சயம்;

தற்பெருமையென்பது பலவகைப்படும். "கரமபயிலும் விரியபேசேல்" என்னும் மகிர்தவாக்கை மறந்து ஒருவன் தன்னைவிடத் தகுதியிலை யென்று, ஒருவன் செல்வத்தினாற் சகலர்க்குமேம்பட்டவன் தானெனவும் நினைத்து எவரையும் மதியாது, வாய்கூசாது, வாய்மை யிழந்து, ஒருவன் [illegible] பிழையான செல்வத்தைக் கைக்கொண்டிருந்தும், எதிர்த்துநிற்பதைச் சகிப்பதிலிருந்து [illegible] அறிவுடன் வாக்குவாதப்படுதல், ஒருவன் தன்செட்டகுணமிகத் தான் உயர்ந்த மற்றவர்களைக் காவலி, தத்துவர், போக்கிரி, தட்டுவாணி, கழிசல் முதலிய பெயரை இழிச்சொற்களாற் கூறுதலும், ஒருவன் தனது தாய்ப்புத்திரியை மத்தும் படி புறதிபுண்டு வறிஞரைத் தண்டித்தல் வெல்லதுபோ, இவ்விதமே [illegible] இவைகளெல்லாவற்றையும் விரித்தெழுத விருக்கின் சிறிய திராவிடன் இடந்தாராதாகலின் சுருக்கமா யெழுதுகின்றேன்.

தற்பெருமையென்பது பலவின் காதிரங்களிலொன்று, இவ்வியாதியைக் கையாண்டு நடக்கும் மாந்தரெவர்களோ அவர்கள் மாந்தரிற் பதராகுமென்பது அறிஞர் கூற்று. எவ்வெச் சாதியாருள்ளும் "தற்பெருமை" யென்னும் பாசம் குடிபோந்திருக்கின்றது. "உதாரணமாய்' உயர்குலத்தற்ற ஒருவன் எவ்விதகெட்டவனாயினுந் தன்சாதியைத்தானுணராமற் குடிகொண்டவனொருவனைப் பார்த்துக் காய்மாரமுற்றுத் தனை மற்றவர்கள் வியக்குமாறு, நான் பெரியகுடியிற் பிறந்தவன்; நீயோ வெளியிழிகுலத்தவன், என்னுடன் சரிக்குநின்று வார்த்தையாடவுனக்கு ஆண்மைகந்ததெதனால்? போ, போ, மடையா வென்று கசைய வின்னுடைசபுமென்பதை யறியாயோ வெனப் பல வசைமொழிகளைக் கூறித் தன்போன்றவொருசாதி வாலிபரைக் கூவி யன்னவனைச் சருவ தெத்தனிக்கின்றான். இவ்விதமே நம் தாழ்த்தப்பட்ட சகோதரருள்ளுமித் "தற்பெருமை" யால் நிகழும் வாக்குவாதங்களைப் பலமுறைநாம் காண்கின்றோம். இவர்களெவ்விதத்தால் பெரியவர்களெனக் கூறி மார்தடிக்கின்றார்? அறிவிற்சிறந்த பெரியோர்களும் மாதாதிரீமான்களும் பிறந்த கண்ணியன்களை மேற்றக்கொள்வார்களா? சகோதரர்களே! உங்களை மேல்வருணத்தார் காலிலுக்கடியாய் நடத்திவருவதை நீங்கள் ஏன்? என உணராதிருப்பீர்கள். உங்கள் பொறாமை காய்மகாரம் தற்பெருமை முதலிய கொடுஞ் செயல்களே யிதற்குக் காரணமென்பதை இன்றுதல் உணருங்கள்.

நீங்களோவெனில், உங்களுளொருவன் கல்வியினாலோ, பணத்தினாலோ, ஒழுக்கத்தினாலோ, மேன்பட்டுப் பலராலும் நன்குமதிக்கப்பெற்று வருவதைக் கண்டவுடனே அவனை எதிர்த்துநின்று தடமேற்றி விழுத்த நினைக்கின்றீர்கள். இத்தகைச்செய்கைகளினாலேதான் நீங்களுயர்ந்துவிட்டோம், உயர்வடைந்தோம், உயர்வடைவோமெனச் சொல்லிச் சிற்றுத்தமாய்த் திரிந்தபோதிலும் உங்களை மேல்வகுப்பார் ஏற்றுக்கொள்ளாதிருக்கின்றனர் இக்கெட்ட குணங்களை யாவையுமொருங்கே விருத்திசெய்துகொண்டு மேல்வகுப்பாரிற் பழிசாற்றி யோலமிட்டாலவர்தானென்செய்வார் காருண்யம் தங்கிய வாக்கிலவாசர்தானென்செய்வர் அக்காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவர் ஒளவை முதலானோர் நற்குணசாலிகளாய் வாழ்ந்திருந்தவர்களே இற்றைக்கு மழியாப் புகழ்பெற்று விளங்குகின்றனர் மேற்கூறிய மேதாவிகளாகப்பெற்ற நீதியை விளக்கும் நூற்களை மேல்வருணத்தவ ரேற்றுக்கொள்ளவில்லையா? இங்ஙனமிருக்க,

"தாஞ்சாக மருந்துண்ணுஞ் சண்டாளர்க்கு நாம் யாதுசெய்வோம் சபதம்" என்பனவாய் நீங்களே புல்லக்குணங்களாற் கெடுப்பதலியடைகின்றீர்கள் ஆகையாலின்றே நீங்களித்தகைக் குணங்களை யொழித்து மற்றவர்களை புகழ்வதற்கு நடக்க முயலுங்கள் உங்கள் சாதியாருளொருவன் திருந்தி மேல்நிலையடைந்திருந்தால் நீங்கள் அறிந்தவுடனே புகழ்ந்து பெருமைகொண்டு [illegible] யகற்றி புலனவியன்ற வசதியையும் புசித்து அன்னவன் மேலும் மேலுந் திருந்தி சன்னிலையிலேறி வளரச்செய்யுங்கள் இங்ஙனமொருவன் புகழுடைய அவனைப் பார்த்தநின்னொருவனு மன்னவனைப்போலாக முயலுவான். அப்போதுங்கள் குலம் முற்றும் முன்னேற்றமடையுமென்பதை மறவாதொழுகுங்கள் இவ்விதம் நடந்துகொண்டால் "கடாபடன் கொடியுந் திரண்டால் மிடுக்கு" என்ற பழமொழியாகப் பெருமையடைவீர்கள். இதை விடுத்து "ஒரு வயிற்றோன் படையெழி வட்டிக்கொள்ள நினைத்து முயன்றவாறாய், நீங்களும் யாருந்தனித்து மற்றதனிச்சனியே முன்னேற்றமடையலாமென்றால், இவ்வுலகமழிந்தாலும் முடியாத தொண்டிமை. ஆகையால் முன்னேற்றமடைய விரும்பும் நம் தாழ்த்தப்பட்ட சகோதரர்களே நாமெல்லாருமொருவரையொருவர் மெச்சிப் பிடித்திருக்குந் தற்பெருமையை விண்டெயகற்றி வறுமையிலுந் தாழ்மையான நிலையிலுமிருந்து சட்டமுறை பேணிய வெஞ்சாஹித்தாற்களையுமொருங்கு சேர்ந்து முன்னேற்றமடைய முயன்றிடில் அதி சீக்கிரத்தில் முன்னேற்றமடைவோமென்பதற் கையமில்லை ஆகையாலின்றே நாமெல்லாரும் தற்பெருமையையகற்றி நற்புகழையடைய முயற்சிப்போமாக.

இங்ஙனம்,
M P. A, பலாலி

திராவிட நேசன் பத்திரிகை.

முன்னறிக்கை.

தமிழர்களின் முன்னேற்றத்திற்காக உழைக்க ஓர் தமிழ்ப் பத்திரிகையை கூட்டுக் கம்பெனியாக வைத்துநடத்தவேண்டுமெனப்பலர் விரும்பியதற்கிணங்கச் சிலபிரமுகர்கள் கூடி கீழ்க்கண்ட காரியக்கார சபையாரால் கீழ்க்கண்ட நோக்கங்கள் வெளியிடப்படுகின்றன பிராஸ்பெக்டஸ் எழுதிச் சிஜிஸ்டர் செய்வதற்கு ஏற்பாடுகள் நடந்துவருகிறது பிராஸ்பெக்டஸ் அப்பளிகேஷன் வெளியிட்டதின் பிறகுதான் பணம் வசூல் செய்யப்படும்.

பெயர்:—"திராவிட நேசன்" பத்திரிகைசாலை
ஸ்தாபனம்:—கோலாலம்பூர்

மூலதனம்.

மூலதனம் $10. 00 (பத்து [illegible] வெள்ளி ஒன்று 60,000 பங்குகள்)

உத்தேச விபரம்.

அச்சயந்திரம், எழுத்து முதலியவைகள்	$20,000.00
காகிதம், மை, ஸ்டேஷனரி	5,000.00
மின்சாரக் கருவிகள்	2,000.00
மேனேஜர்களின், தலைமை முதலிய சம்பளங்கள்	2,000.00
கட்டடம்—நிலம் உட்பட	25,000.00
இப்பத்திரிகை நடப்பதற்கும், அவசர செலவிற்கும் பாங்கில (Bank) இருப்பு	6,000.00
மொத்தம்	$60,000.00

முயற்சிகள்.

1. பத்திரிகைகள் நடத்துவது;
2. வேண்டியவர்களுக்குப்புஸ்தகங்கள், இல்லறை அச்சுவேலைகள் செய்வது;
3. புஸ்தகங்கள், ஸ்டேஷனரி சமான்கள் விற்பது.

பத்திரிகை:—பெயர் 'திராவிட நேசன்' (தமிழ் வாரப்பத்திரிகை) பத்திரிகையின் நோக்கங்களும் கொள்கைகளும்:—

( ) சமூகசீர்திருத்தம்:—சமூக முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள வழக்கங்களை சீர்திருத்தல், பால்யவிவாகத்தைத் தடுத்து விதவா விவாகத்தை ஆதரித்தல், கலாசாரமுறைகளை வாழ்க்கையிலும் உடையிலும் உணவிலும் பழக்கமாகக்கொள்ளும்படி போதித்தல், இன்னும் சமூக சீர்திருத்தத்திற்கு அவசியமான விஷயங்களை அவ்வப்பொழுது எடுத்துக்காட்டல்

(1) சுயமரியாதையை ஆதரித்தல்:— ஒடுக்கப்பட்டவர்களை மரியாதையுடன் நடத்தி அவர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தல்

சமரசம்போல், உயர்ந்தஜாதியோ அல்லது தாழ்ந்தஜாதியோ உண்டென்பதை ஆதரியாதிருத்தல்

பொது ஸ்தாபனங்களில் சமூகத்திற்கு உண்டாகும் கஷ்டங்களை நீக்குவதற்குத் தகுந்த முறைகளில் முயற்சித்து உதவி புரிதல்.

எஸ். கே. லோட்டன் அன்டு கோ.,
பறங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் க. லோட்டன் காலந்தொடங்கி நாங்கள் புகைப்படம் எடுத்துவருகின்றோம். உங்களுக்கு உங்களைப்போலக் காண விருப்பமிருந்தாலும் அல்லது மற்றும் படமுள்ளவர்களை சேரிற் காண விருப்பமிருந்தாலும் செய்வதென்ன?

எங்களுக்கு ஓர் "கார்ட்டு" எழுதி அறிந்துகொள்ளவும்.

மானேஜர்,
எஸ் கே. லோட்டன் அன்டு கோ.

ஓறியன்றல் ஸ்ரோர்ஸ்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இசாவியாபாரங்களுடன், பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிற்கு வேண்டிய கதிரைகள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிகள், பொதுவாக வீட்டிற்கு வேண்டிய எல்லாவித மரச்சாமான்களும், எங்களுடைய மாதிரிகளைக்கொண்டு திறமான தச்சர்களால் தொழிற்பில் செய்வித்து யாவரும் விரும்பும்படி யாவரும் வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றோம். ஒருமுறை வந்து பாருங்கள்.

வ. ஐ துரையப்பா,
சொந்தக்காரர்.

தனலட்சுமி புத்தகசாலை.

அன்பார்ந்த வித்தியாபிமானிகளுக்கு அறிவிப்பது:—

இப் புத்தகசாலையில் சகலவிதமான பள்ளிக்கூடப் புத்தகங்களும், பள்ளிக்கூடங்களுக்கு வேண்டும் மற்றுஞ்சகலசாமான்களும், "யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிர்த்திச்சங்க" பரீட்சைக்குரிய புத்தகங்களும், ஆசிரியர் பிரவேசபரீட்சை, இரண்டாம் மூன்றாம் தராதரப் பத்திரம்பெறுவோர்க்குரிய புத்தகங்களும், இதர நூல்களும் கிடைக்கும். வேண்டியவர்கள் நேரிலும் வீ. பீ. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப்படும்.

தனலட்சுமி புத்தகசாலை,
சுன்னாகம்.

யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ்,
(பொன்னுச்சாமி ஷாப்)
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டினத்திற்குச் சாமான் வாங்க வந்தால் பிற கடைகளின் விலைகளை அறிந்திருந்தாலும், எங்கள் ஷாப்பின் விலைகளையும் சாமான்களையும் ஒத்துப்பார்த்து வாங்கவும்.

பலவிதமான கேஸ்ட்டிகள் சால்வைகள் ஷேர்ட்டுகள் மற்றுமுள்ள எல்லா ஷாப்புச் சாமான்களும் நேரிலும் பிரத்தியேகமான ஏஜண்டுகள் மூலமாகவும் வரவழைத்து விற்கின்றோம்.

டாக்டர்களால் குறிக்கப்பட்ட எல்லாவித மருந்துகளும் எங்கள் மருந்து ஷாப்புப் பிரிவில், சர்டிபிகேட்பெற்ற ஆட்களைக் கொண்டு, மிக சரசமாயும் சணக்கமின்றியும் தயாரித்துக் கொடுக்கப்படும் எல்லாப் பேட்டன்ட் மருந்துகளும் கிடைக்கும்.

Dr. S Ponnusamy,
Proprietor & Manager.

Printed by V. M. Kandiah for and on behalf of the Jaffna Depressed Classes Association Chunnagam & published at the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.

Printed by - V. M. Kan
Chunna